tamoul ↔ france

# mediahouse

MAISON DES MEDIAS

08.07.2009

## ஊடக இல்லம் விடுக்கும் அழைப்பு

ஊடகத்துறையில் நீண்ட காலமாகத் தனது பங்களிப்பை வழங்கிவரும் ஊடக இல்லம் (Media House - Maison des Medias) காலத்தின்தேவை கருதி தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கில் புதிய செயற்பாட்டாளர்களை இணைத்துக்கொள்ள விரும்புகின்றது.

ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் ஊடக இல்லத்தில் உங்களையும் இணைத்துக்கொண்டு தமிழீழத் தேசியத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்கலாம்.

எமது செயற்பாடுகளாக

01) தமிழரின் நிகழ்கால வாழ்க்கை மற்றும் வரலாற்றை ஆவணமாக்கல், பகிர்ந்து கொள்ளல்.
02) தமிழ்ச் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்களை (நிழற்படம் மற்றும் வீடியோ) இணைத்தல்.
03) அவர்களது பாதுகாப்பு, ஊடக உரிமைகள், சுதந்திரத்தையும் பாதுகாத்தல்.
04) அவர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்.
05) பிரெஞ்சு, அனைத்துலக செய்தியாளர்களுடனும் உறவுகளை உருவாக்குதல். (கூட்டுறவு, நட்பு மற்றும் ஒத்துழைப்பு)
06) தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக பிரெஞ்சு மற்றும் அனைத்துலக தொடர்புசாதனங்கள் மூலம் குரல்கொடுத்தல்.
07) உறுப்பினர்களுக்கு ஊடகவியல் சார்ந்த விசேட பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல்.
08) புதிய இளம் ஊடகவியலாளர்களை உருவாக்குதல்.
09) தாயகத்தில் ஊடகவியலாளர்களை ஊக்குவித்தலும், அதற்கான கட்டமைப்புக்கு உதவுதலும்.

என்பவை அமையும்

நன்றி.

**உங்கள் தொடர்புகளுக்கு**
mediahouseworld@gmail.com